## இந்திய ஜனநாயகம் – நாடாளுமன்ற மரபுகள் – மக்களாட்சி – அரசியலமைப்பைக் காக்க

# நீதியரசர் சுதர்சன் ரெட்டி - குடியரசுத் துணைத் தலைவராக வெற்றி பெற்று வரவேண்டும்!

### சென்னையில் நடைபெற்ற – கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் – நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, ஆக. 26 -**

**சென்னை - தியாகராயர் நகர் - அக்கார்டு ஓட்டலில், நேற்று முன்தினம் (24.8.2025), மாலை, எதிர்க்கட்சிகள் கூட்டணியின் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் - உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்களை ஆதரித்து, கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் நீதியரசரை வாழ்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "இந்திய ஜனநாயகம் - நாடாளுமன்ற மரபுகள் - மக்களாட்சி -அரசியலமைப்பைக் காக்க குடியரசுத் துணைத் தலைவராக நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்கள் வெற்றி பெற்று வரவேண்டும்!" என்று குறிப்பிட்டார்.**

**முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

நாட்டின் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் போட்டியிடக்கூடிய மரியாதைக்குரிய சுதர்சன் ரெட்டி அவர்களை தமிழ்நாட்டுக்கு வருக, வருக, வருக என வரவேற்கிறேன்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மட்டுமல்ல, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பிலும் முதலில் அவருக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**குடியரசு துணைத் தலைவர் பொறுப்புக்கு மிகவும் தகுதி வாய்ந்தவர்!**

மரியாதைக்குரிய சுதர்சன் ரெட்டி அவர்களே… அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கும் உச்சநீதிமன்ற நீதியரசராக பணியாற்றுகின்ற நீங்கள், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்புக்கு மிகவும் தகுதிவாய்ந்தவர்! அதனால்தான், இந்தியா கூட்டணி சார்பில், உங்களை வேட்பாளராக அறிவித்திருக்கிறோம்!

உங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து அறிவித்த இந்தியா கூட்டணியின் அனைத்து தலைவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்! இந்தியா கூட்டணியினர் மட்டுமில்லை, ஜனநாயகத்தின் மீதும் மக்களாட்சித் தத்துவத்தின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கின்ற அத்தனை பேரும் உங்களைத்தான் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்!

**தமது வாழ்வையே சட்டம்- நீதிக்காக அர்ப்பணித்தவர்!**

தென் மாநிலத்தைச் சேர்ந்த இவருடைய Profile-ஐ எல்லோரும் கவனிக்க வேண்டும்.

உஸ்மானியா யூனிவர்சிட்டியில் சட்டம் பயின்று, 1971-ல் வழக்கறிஞராக ப்ராக்டிஸ் செய்யத் தொடங்கினார். பின்னர், ஆந்திர மாநில அரசு வழக்கறிஞர் - ஒன்றிய அரசின் கூடுதல் நிலை ஆலோசகர் - ஆந்திர மாநில உயர்நீதிமன்ற நீதிபதி - கவுகாத்தி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி என்று படிப்படியாக தன்னுடைய career-ல் முன்னேறி, மாண்பமை உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பு வகித்து, இன்றைக்கு குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக உயர்ந்திருக்கிறார். கிட்டத்தட்ட தன்னுடைய அறுபது ஆண்டுகால வாழ்வை, சட்டம் – நீதி ஆகியவற்றுக்காக அர்ப்பணித்திருக்கிறார். இவர் நீதியரசராகப் பணியாற்றிய காலத்தில், நேர்மையாக, சுதந்திரமாகச் செயல்பட்டு, மக்களுடைய உரிமைகளையும், சமூகநீதியையும் உயர்த்திப் பிடித்து, அரசியலமைப்புச் சட்டத்தின் மாண்பையும் போற்றி பாதுகாத்தவர்.

கோவா மாநில லோக் ஆயுக்தா தலைவராகவும் இருந்துள்ளார். இவர் ஏன் இன்றைக்கு தேவைப்படுகிறார் என்றால், பா.ஜ.க.வினர் அரசியலமைப்புச் சட்டத்தைச் சிதைக்க நினைக்கின்ற இந்த நேரத்தில், அரசியல் சட்டத்தைப் பாதுகாத்த நீதியரசரான இவர், அதைப் பாதுகாக்கின்ற பொறுப்புக்குத் தேவைப்படுகிறார்! மாண்புமிகு சுதர்சன் ரெட்டி அவர்களைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கக் கூடியவர்! அதற்கு ஒரு எடுத்துக்காட்டுதான், புதிய தேசிய கல்விக் கொள்கையை திரும்பப் பெற வலியுறுத்தி, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் - கலைஞர்கள் சங்கம் நடத்திய மாநாட்டில் அவர் பேசியது!

**அவர் பேசியதை சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், "இது திருவள்ளு வர், பாரதியார், பெரியார், கலைஞர் ஆகியோருடைய மண். போராட்டக் குணத்தை இந்த மண் எப்போதும் விடுவதில்லை" என்று சொல்லி, "புதிய தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராகப் போராடுவது நம்முடைய கடமை. இது இந்த தேசத்துக்கு நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான பணி. இவர்கள் கொண்டுவர நினைக்கின்ற தேசிய கல்விக் கொள்கை மனித மாண்புகளுக்கு எதிரானது. "நான் - எனது - என்னுடையது" என்ற கலாச்சாரத்தை மட்டுமே இது உருவாக்கும். பன்முகத் தன்மையையோ, கல்வியின் ஜனநாயகப் பரவலையோ இது உருவாக்காது" என்று தன்னுடைய கருத்துகளைப் பதிவு செய்து, தமிழ்நாட்டின் உணர்வுகளை உறுதியுடன் வெளிப்படுத்தினார். இப்படி, அரசியலமைப்புச் சட்டத்துக்காகவும், தமிழ்நாட்டுக்காகவும், முற்போக்காகவும், மக்களுக்காகவும் பேசுகின்ற இவரை நாம் முன்மொழிய, இதைவிடப் பெரிய காரணம் தேவையா?**

**கையாலாகாதவர்கள் நீதியரசர் மீது பழிபோட்டுத் தப்பிக்க முயற்சி!**

ஆனால், முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசரை உள்துறை அமைச்சர் என்னவென்று விமர்சிக்கிறார்? நக்சல் என்று சொல்கிறார்! ஒரு உள்துறை அமைச்சர், தன்னுடைய பொறுப்பை மறந்து, ஒரு முன்னாள் நீதியரசர் பற்றி அபாண்டமாகப் பேசி இருக்கிறார். அவர்களால் தீவிரவாதத்தை ஒழிக்க முடியவில்லை! அந்தக் கையாலாகாத நிலையை மறைக்க, நீதியரசர் மேல் பழி போட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.8.2025) சென்னையில், எதிர்க்கட்சிகள் கூட்டணியின் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்களுக்கு சால்வை அணிவித்து, அய்யன் திருவள்ளுவர் சிலையினை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

**சுதர்சன் ரெட்டி அவர்களை ஆதரிக்க வேண்டியது நமது கடமை!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது? அரசியல் எதிரிகளைப் பழிவாங்க, புலனாய்வு அமைப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறது. தன்னாட்சி அமைப்புகளை, பா.ஜ.க.வின் துணை அமைப்புகளாக மாற்றிக் கொண்டிருக்கிறது. அரசியலமைப்புச் சட்டமே ஆபத்தில் சிக்கி இருக்கிறது. இந்தச் சூழலில், இந்தியாவின் அடிப்படைக் கொள்கைகளான மதச்சார்பின்மை, கூட்டாட்சித் தத்துவம், சமூகநீதி, 'வேற்றுமையில் ஒற்றுமை' ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட ஒருவர் இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கிறார். அவரை ஆதரிப்பதுதான் நம்முடைய முன்னால் இருக்கின்ற கடமை!

**மக்கள் நலனுக்கான கருத்தியலையே ஆதரிக்க வேண்டும்!**

ஆனால், பா.ஜ.க.வோ, தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எதிரான அத்தனை நடவடிக்கைகளையும் செய்துவிட்டு, தமிழர் என்ற முகமூடியை அணிந்து ஆதரவு கேட்கிறார்கள். இதெல்லாம் ரொம்ப பழைய 'ட்ரிக்'! தனிமனிதர்களைவிட தத்துவங்கள்தான் அரசியலை வழிநடத்தும். தனி மனிதர்கள் என்பவர்கள் வெறும் பிம்பங்கள்தான். அதனால், எந்தக் கருத்தியல், மக்களுக்கான, மக்கள் நலனுக்கான கருத்தியலோ, அதைத்தான் ஆதரிக்க வேண்டும்.

**ஜனநாயகம் காப்போம்! நாடாளுமன்ற மரபுகள் காப்போம்!**

எனவே, சட்டநீதிக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் போராடிய, வாதாடிய, தீர்ப்பு வழங்கிய மாண்பமை சுதர்சன் ரெட்டி அவர்கள் இந்திய ஜனநாயகத்தைக் காக்க, நாடாளுமன்ற மரபுகளைக் காக்க, மக்களாட்சியைக் காக்க, அரசியலமைப்பைக் காக்க குடியரசுத் துணைத் தலைவராக வெற்றி பெற்று வரவேண்டும் என்று வாழ்த்தி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### எம்.ஜி.ஆர். திரைப்பட பயிற்சி நிறுவன வளாகத்தில்

# அதிநவீன படப்பிடிப்புத் தளம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஆக. 26 -**

**தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் ரூ.5.10 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட குளிர் சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை, தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் 5.10 கோடி ரூபாய் செலவில் முழு அளவில் புனரமைக்கப்பட்ட குளிர் சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நிறுவனமானது திரைப்படத் தயாரிப்பு, தொழில்நுட்ப கல்வி நுணுக்கங்களையும் கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத் தருவதாகும்.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக ரூ.1.58 கோடி செலவில் இப்பயிற்சி நிறுவனத்தின் கூட்ட அரங்கம், பழுதடைந்த கட்டடங்கள் மற்றும் மின்கலன்கள் போன்றவை சீரமைக்கப்பட்டுள்ளதோடு, மாணவ, மாணவியர் மற்றும் பணியாளர்கள் அமர்ந்து உணவு அருந்துவதற்காக ரூ.25 இலட்சம் செலவில் உணவு அருந்தும் அறையும் அமைக்கப்பட்டது. மேலும், இந்நிறுவனத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையின் பேரில் மாணவர் கல்வி நலன் கருதி பாடத்திட்டங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களின் நலன் கருதி இறுதித் திட்ட குறும்படப் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவினம் ஒவ்வொரு குழுவிற்கும் ரூ. 1 இலட்சம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நிறுவனத்தை மேலும் மேம்படுத்தும் வகையிலும், மாணவர்களின் கல்வி நலன்கருதியும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் ஒப்பனை அறைகள், அலங்கார உடை அறை, உணவு அருந்தும் அறை ஆகியவை இணைந்த குளிர்சாதன வசதியுடன் கூடிய சுமார் 17,517 சதுர அடி படப்பிடிப்புத்தளம், பழைய மாணவர் விடுதி, நீதிமன்றம், சிறைச்சாலை, படப்பிடிப்புத் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய குளிர்சாதனக் கருவிகள், இரண்டு புதிய மின்மாற்றிகள் (11 kv HT 500 KVA Transformers) மற்றும் இதர மின் சீரமைப்புப் பணிகள் உள்ளிட்டவை 5.10 கோடி ரூபாய் செலவில் முழு அளவில் புனரமைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த புனரமைக்கப்பட்ட குளிர் சாதன வசதியுடன் கூடிய படப்பிடித்துத் தளம் திரைப்படத்துறையினருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் ட்ராட்ஸ்கி மருது, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் (முழு கூடுதல் பொறுப்பு) மு.மேகவர்ணம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




நெல்லை கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று உரையாற்றினார். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ்ராஜன், சிவராஜ்,ஜோசப்ராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம், பிரபாகரன், சித்திக், மாநில நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ் குமார்ஆதித்தன், பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணைச் செயலாளர் நம்பி, தமயந்தி, மைக்கேல், வழக்கறிஞர் அணி செல்வசூடாமணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.